# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.49/2024

### அ.சா.1 (LW 1 )

| **பெயர்** | **திரு.ஆண்டி** | **தொழில்** | |
|---|---|---|---|
| **த/ பெயர்** | கருப்பையா | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **19.06.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 ,2 எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கலிக்கப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கான்கிரீட் வேலை செய்கிறேன். என்னுடன் சேர்த்து உடன் பிறந்தவர்கள் 5 பேர்கள் ஆவார்கள். அதில் 4 ஆண்களும் 1 பெண்ணும் ஆவார். 1. அண்ணன் செல்வம், 2) தம்பி செல்வம், 3) தர்மராஜ், 4) கலாவதி, ஆகும். என் அண்ணன் செல்வம் திருப்பூரில் வசித்து வருகிறார். தம்பி செல்வம் உடல்நிலை சரியில்லாமல் இறந்து விட்டார். தர்மராஜ் இவ்வழக்கில் இறந்தவர் ஆவார். ஆஜர் எதிரிகள் இறந்த தர்மராஜின் மகன்கள் ஆவார்கள். என் தம்பி தர்மராஜ் மனைவி பெயர் மாரியம்மாள், மகன்கள் பெயர்கள், தினேஷ்பாண்டி, ஜான் பாண்டி ஆஜர் எதிரிகள் ஆவாகள். கடந்த 2 வருடத்திற்கு முன்பு நான் தங்கல் வேலைக்கு சென்றிருந்தேன், அப்போது எனக்கு ஊர்த்தலைவர் போன் செய்து என் தம்பி தர்மராஜ் இறந்து விட்டதாக சொன்னார்கள். பின்பு திண்டுக்கல் பெரியாஸ்பத்திரிக்கு போனோம். பிரேத பரிசோதனையின் போது பார்க்கவில்லை. மின்மயானத்தில் தான் பார்த்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடன் என் தங்கை கலாவதி சாட்சி கையொப்பம் போட்டார். எனக்கு படிக்க தெரியாது என்பதால் படித்தவர் முத்துகிருஷ்ணன் என்பவர் எழுதிக் கொடுத்தார். புகாரிலுள்ள என்ன எழுதியுள்ளது என்ற விவரம் தெரியாது. புகாரிலுள்ள கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.1.** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநீயம் சட்டம் பிரிவு 157 ன் கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

என் தம்பி தர்மராஜ் , அவரது மனைவி மாரியம்மாள், ஆஜர் எதிரிகள் இருவரும், என் தம்பியின் மருமகள் ஆகியோர் ஒன்றாகத்தான் குடியிருந்தார்கள் என்றால்

சரிதான். என் தம்பி தர்மராஜ்க்கு சரக்கு அடிக்கும் பழக்கம் உண்டு என்றால் சரிதான். என் தம்பி தர்மராஜ் தினமும் சரக்கு அடித்து வருவார் என்றால் அவர் கான்கிரிட் வேலை செய்வதால் சரக்கு அடித்து வருவார் என்றால் சரிதான். என் தம்பி மகன்கள் தினேஷ்பாண்டி, ஜான் பாண்டி ஆகியோர்கள் என்ன வேலை செய்கிறார்கள் என்றால் கூலி வேலை செய்கிறார்கள். நான், எனது தம்பி தர்மராஜ்ன் வீட்டருகில் உள்ளேனா என்றால் ஒரு 5 வீடு தள்ளி உள்ளேன். என் தங்கை கலாவதி எங்கே குடியிருக்கிறார் என்றால் என் அப்பாவுடன் அவரும் எங்கள் அருகிலேயேதான் குடியிருக்கிறார். என் தம்பி மகன் ஜான்பாண்டியன் சம்பவத்திற்கு 1 1/2 வருடத்திற்கு முன்பு முத்துலெட்சுமி என்பவரை கல்யாணம் செய்தார் என்றால் சரிதான். ஜான்பாண்டியனுக்கும் , முத்துலெட்சுமிக்கும் ஒரு மகன் உள்ளார் என்றால் சரிதான். என் தம்பி குடித்து விட்டு தினமும் சண்டையிடுவாரா என்றால் அடிக்கடி சண்டை வரும். அந்த சண்டையை நானும் என் தங்கை கலாவதியும் போய் சமாதானப்படுத்தி வருவோம் என்றால் சரிதான். நானும் என் தங்கையும் போய் ஏன் இப்படி சண்டை போடுகிறாய் என்றும் எங்களை அசிங்கப்படுத்துகிறாய் என கேட்டுள்ளோம் என்றால் சரிதான். என் தம்பி தர்மராஜ் என் பேரப்பிளைள்ளை தூக்க கூடாது என சண்டை போட்டார்கள் என்றால் நான் பார்க்கவில்லை. 13.03.2023 அன்று மதியம் 03.00மணிக்கு நான் கான்கிரிட் வேலை முடித்து விட்டு வீட்டிற்கு சென்று விட்டேன் என்றால் சரிதான். அன்றைய தினம் கன் தம்பி தர்மராஜ்க்கும் அவரது மகன்களுக்கும் சண்டை நடந்ததை நான் கேள்விப்பட்டேன் என்றால் சரிதான். அந்த சண்டையை என் அப்பா சமாதானப்படுத்தினார் என்றால் சரிதான். அதன்பின்பு நானும் என் மகன் ராஜாவும் எங்கள் வண்டியில் திண்டுக்கல்லுக்கு காய்கறி சாமான்கள் வாங்குவதற்காக வந்து விட்டோம் என்றால் சரிதான். நானும் என் மகனும் வீட்டிற்கு திரும்பி வரும் போது இரவு 09.30மணி இருக்கும் என்றால் சரிதான். அவ்வாறு வரும் போது கோட்டைப்பட்டி பிரிவில் என் தம்பி தர்மராஜ் வண்டியில் என் தம்பி மகன்கள் தினேஷ்பாண்டி, ஜான்பாண்டி ஆகியோர்கள் இருந்ததை நான் பார்த்தேனா என்றால் இல்லை, என் மகன் பார்த்தார். நான் அப்போது அவர்களை பார்த்து ஏண்டா இங்க நிற்கிறிங்க என கேட்டேன் என்றால் இல்லை. அதற்கு என் தம்பி மகன்கள் அப்பா போதையில் இருப்பதாகவும் அவரை வீட்டிற்கு கூட்டி வருவதாகவும் சொன்னார்கள் என்றால் இல்லை. அதன்பிறகு நான் வீட்டிற்கு சென்று விட்டேன் என்றால் சரிதான். நான் என் வீட்டு வாசலில் அன்று இரவு 11.30 மணி அளவில் உட்கார்ந்திருந்த போது என் தம்பி இல்லாமல் என் தம்பி மகன்கள் மட்டும் வந்ததை பார்த்தேன் என்றால் சரிதான். அப்போது அவர்களிடம் நான் கேட்டதற்கு என் தம்பி போதையில் இருப்பதாகவும் அவர் வருவார் எனவும் சொன்னார்கள். அதை நான் கேட்டு தூங்க சென்று விட்டேன் என்றால் சரிதான். 14.03.2023 அன்று காலை 07.00மணிக்கு நான் என் வீட்டிலிருந்தேன் என்றால் சரிதான். அப்போது என் தம்பி தர்மராஜ் கோட்டைப்பட்டி

விஜய் எம்பிஏ காலேஜ் அருகில் வசந்தம் நகர் ரோட்டில் அருகிலுள்ள TVSXL Heavy duty உடன் கீழே கிடப்பதாக தகவல் சொன்னார்கள் என்றால் சரிதான். அந்த வண்டி TN 57 – AL–8680 என் அப்பா வண்டி ஆகும் . அந்த தகவலை கேள்விப்பட்டு நான் என் மகன் ராஜா, என் தங்கை கலாவதி, அப்பா கருப்பையா, மற்றும் உறவினர்கள் எல்லாரும் சேர்ந்து போய் பார்த்தோம் என்றால் சரிதான். அந்த இடத்தில் நான் என் தம்பியை பார்க்கும் போது என் தம்பி தர்மராஜ்க்கு முகம், கை, கால்களில் சிரைந்து இருந்தது. நான் என் தம்பி தர்மராஜை பார்க்கும் போது அவர் உயிருடன் இல்லை என்றால் சரிதான். கடைசியாக என் தம்பியை உயிருடன் நான் என் தம்பி மகன்களுடன் பார்த்தேன் என்றால் இல்லை. மேற்படி சம்பவத்தை நான் பார்த்து விட்டு நான் வாத்தியார் முத்துகிருஷ்ணன் என்பவரிடம் நடந்த விவரத்தை சொன்னேன் என்றால் சொல்லவில்லை. நான் சொல்லித்தான் முத்துகிருஷ்ணன் புகாரை எழுதினார் என்றால் இல்லை. எனக்கு படிக்க தெரியாததால் நான் சொல்லச் சொல்ல எழுதி முத்துகிருஷ்ணன் என்னிடம் வாசித்து காண்பித்து சாட்சி கையெழுத்தாக கலாவதி போட்டார் என்றால் இல்லை, காவல்துறையினர் கேட்டதால் போட்டோம். நடந்த விவரங்கள் அனைத்தும் தெரிந்திருந்தும் ஆஜர் எதிரிகள் என் தம்பி மகன்கள் என்பதாலும் அவர்களை வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்திற்கு எதிரிகளுடன் வந்தேனா என்றால் தனிதனியாக வந்தேன். நானும் என் தம்பி மகன்களும் ராசியாகி விட்டோம் என்றால் சரிதான்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் மட்டுந்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். புகாரை யார் சொல்லி எழுதப்பட்டது என்ற விவரம் என்கடு தெரியாது என்றால் சரிதான். வழக்கின் விவரங்கள் குறித்து முத்து கிருஷ்ணனிடம் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த தாள் வெற்றுத் தாளாக இருந்தது என்றால் சரிதான். அதே வெற்றுத் தாளில்தான் முத்துகிருஷ்ணன் கையெழுத்திட்டார் என்றால் சரிதான். என் தம்பி அடிக்கடி குடித்து விட்டு ஊரில் உள்ள பல நபர்களிடம் சண்டை, சச்சரவு உள்ளது என்றால் சரிதான். அதனால் பலருக்கு என் தம்பி மீது பகை உள்ளது என்றால் சரிதான். அந்த பகையினால் யாரோ ஒருவர் என் தம்பியை கொலை செய்வதற்கு வாய்ப்புள்ளது என்றால் சரிதான். எந்தெந்த தேதியில் என் தம்பியை நான் பார்த்தேன் என குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். வழக்கில் இறந்த என் தம்பி எந்த தேதியில் இறந்தார் என்றும் எனக்கு எப்போது தகவல் கிடைத்தது என்பது பற்றி சொல்ல இயலாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.06.22 18:48:27 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.